**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை : திரு. என். ஞானசம்பந்தம், பி.ஏ.பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**
**2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள், வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண்.9/2023**
**இன்**
**அ.வ.எண்.88/2019**

1. A. முகம்மது யூசுப்
2. A. சேட்டு முபாரக் --- மனுதார்கள் /வாதிகள்

/ எதிர் /

1. கருப்புச்சாமி
2. சண்முகசுந்தரம்
3. நிர்வாக அதிகாரி, பாலசமுத்திரம் பேரூராட்சி
4. வட்டாட்சியர், பழனி
5. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் ---எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதார்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஹரிஹரன் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் முன்னிலையாகிவும், இம்மனு இறுதி விசாரணைக்காக 15.03.2023 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

அசல் வழக்கல் மனுச்சொத்தை பொறுத்து ஏற்கனவே நீதிமன்ற ஆணையரால் பார்வையிட்டு அளந்து அத்துமால் செய்து அறிக்கை தாக்கல் செய்து, அதில் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமான சர்வே எண்.829/12-ஐ

பொறுத்து அளவை செய்ய தவறிவிட்டதால், மீண்டும் நீதிமன்ற ஆணையரை Revisit செய்ய உத்தரவிடுமாறு மனுதார்கள் /வாதிகளால் சி.பி.சி. ஆர்டர் 26, ரூல் 9, பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2. மனுதார்கள் /வாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு:–**</u> பிராது சொத்து விபரத்தில் துலக்கப்பட்டுள்ள சர்வே எண்.829/9 ஆகும். அதனருகில் உள்ள சர்வே எண்கள்.829/10, 829/11, 829/12, 859/58 ஆகும். இந்த சர்வே எண்கள் தான் தாவா பிரச்சனைக்குரிய சர்வே எண்கள் ஆகும். அதன்படி மேற்கண்ட சர்வே எண்களை அளவை செய்வதற்காக நீதிமன்றத்தில் இ.ம.எண்.7/2021–ல் ஆணையர் நியமனம் கோரி மனுத்தாக்கல் செய்து, அதன்படி ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி ஆணையர் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.829/9 நான்கு எல்லைகளையும் பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதேபோல் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.829/11, 829/58, 829/10 ஆகியவற்றை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சர்வே எண்.829/12 ஐ நீதிமன்ற ஆணையர் அளவை செய்யவில்லை. அப்பொழுது மனுதாரர்கள் வாய்மொழியாக சர்வே எண்.829/12–ல் திறந்தவெளி கோவில் அமைந்துள்ள இடத்தை அளந்து அதனை தொடர்ந்து சர்வே எண்.829/11 மற்றும் 829/58 ஐ அளவை செய்ய அறிவுறுத்தியதாகவும், அப்போது ஆணையர் மனுதாரர்களின் சொத்து விபரத்தில் சர்வே எண்.829/12 ஐ பொறுத்து குறிப்பிடப்படவில்லை. அதனை அளவை செய்ய இயலாது என்று தெரிவித்து விட்டார்.

உண்மையில் நத்தம் சர்வே எண்.829/12 உள்ள திறந்தவெளி கோவில் இடத்தினையும் அதன் அளவுகளை அளந்து பார்த்தால் தான் அதனை அடுத்து வரக்கூடிய சர்வே எண்.829/11 மற்றும் 829/58 அளவுகள் சரியாக இருக்கும். நீதிமன்ற ஆணையர் அளவை செய்யும் சமயம் எந்தவொரு இடத்திலும் அரசு

வருவாய் சர்வே கற்களை கண்டறியவில்லை. அதற்கான சாத்தியக்கூறுகள் இப்பகுதியில் இல்லை என்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் தெரிவித்துவிட்டதால், மேற்படி நீதிமன்ற ஆணையரும் மனுதாரர்களின் வீடு மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்களின் வீட்டு சுவற்றின் அளவுகளை மட்டும் வைத்து கணக்கீட்டு அளவுகள் செய்துவிட்டார்கள். உண்மையில் சர்வே எண்.829/12 ஐ பொறுத்து அளவை செய்திருந்தால் சர்வே எண்.829/11 மற்றும் 829/58 ஆகிய அத்துமால் விபரங்கள் தெள்ளத்தெளிவாய் இருக்கும். சர்வே எண்.829/12 ஐ அளவை செய்யாததால், சர்வே எண்.829/11 மற்றும் 829/58 அளவுகள் சரியாக இல்லை. மேலும் ஏற்கனவே அரசு தரப்பில் 3ம் எதிர்மனுதாரரான பஞ்சாயத்து பேரூராட்சியில் சர்வே எண்.829/58-ல் உள்ள குளிக்கும் இடத்தை ஆக்கிரமிப்பு என்று அகற்ற வேண்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்.829/58 நிலமானது ஆணையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரர்களின் வீட்டுவாசல் முன்புவரை வராது. ஆனால் சர்வே எண்.829/12 ஐ அளவை செய்யாததால் தற்போது மேற்படி சர்வே எண்.829/11 மற்றும் 829/58 ம் மனுதாரர்கள் வீட்டு வாசல் பகுதியை கடந்து வருகிறது என மனு தாக்கல்.

<u>3. 1, 2 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு:-</u> மனுதாரர்கள் / வாதிகள் சர்வே எண்.829/9-ல் உள்ள சொத்திற்கு மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இ.ம.எண்.7/2021-ன் படி வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் குறுவட்ட அளவையருடன் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேலும் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தான சர்வே எண்.829/9 உடன் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு உரிமைப்பட்ட சர்வே எண்.829/11, 829/58 மற்றும் 829/10 உள்ள சொத்துக்களையும் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்று மனுதாரர்கள் தங்களது அபிடவிட்டில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

மனுதாரர்கள் சர்வே எண்.829/9 க்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு உரிமைப்பட்ட சர்வே எண்.829/11 மற்றும் 829/58 யையும் நீதிமன்ற ஆணையர் அளவை செய்து அறிக்கை தாக்கல் செய்த பின்னர் மேற்படி வழக்கிற்கு எவ்வித சம்மந்தமும் இல்லாத கோவில் இடமான சர்வே எண்.829/12 யையும் சேர்த்து மறுபடியும் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினை Scrap செய்ய மனு தாக்கல் செய்யாமல், Re –visit செய்ய மனுத்தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை. அவ்விதம் தாக்கல் செய்திருக்கும் இம்மனு பலனற்றது.

மனுதாரர்களின் முன்னுரிமையாளரான முகமது ராவுத்தர் ஆவண எண்.2245/1938 ம் நாள் கிரையம் பெற்ற சொத்தின் நான்குமாலில் " தெற்கே வீரமாத்தியம்மன் கோவில் வீட்டு வாசல் இடம் " என்றும் ஆவண எண்.1888/1946–ம் நாள் கிரையம் பெற்ற சொத்தின் நான்குமாலில் " வடக்கே கோவில் வீடு " என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்படி ஆவணங்களின்படி பாதை அமைப்பு எதுவும் இல்லை என்பது தெளிவாகிறது. நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்துச்செய்ய கோரி எதிர்மனுதாரர்களால், மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு 1, 2 எதிர்மனுதாரர்களால் வருவாய் கோட்டாட்சியரிடம் மனுத்தாக்கல் செய்து அவ்வழக்கு விசாரணைக்காக நடவடிக்கையில் இருந்து வருகிறது.

மனுதாரர்கள் தூண்டுதலின்பேரில் பாலசமுத்திரம் பேரூராட்சியில் 1, 2 எதிர்மனுதாரர்களின் வீட்டின் கழிப்பிட பகுதியை இடித்து சேதப்படுத்தியதாலும், ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நிறுத்தக்கோரி 2ம் பிரதிவாதியால் வருவாய் துறையினர் மற்றும் பாலசமுத்திரம் பேரூராட்சிக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் W.P.(MD)No.9835/2017 & W.M.P.(MD)No.7535/2017–ல் வழக்கு தாக்கல் செய்திருந்ததில்

வருவாய்த்துறையினருக்கு எதிராகவும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாகவும் தீர்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன்பின்பு வருவாய்த்துறையினரும், பாலசமுத்திரம் பேரூராட்சியும் தங்களது தவறான மற்றும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளை கைவிட்டு விட்டனர். மனுதாரர்கள் தங்களது மனுவில் வேண்டுமென்றே மேற்குறிப்பிட்ட விபரத்தை மறைத்து உள்ளார்கள்.

மனுதாரர்கள், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு உரிமைப்பட்ட வீட்டையும், கோவில் மற்றும் கோவில் வீட்டினையும் மோசடியாக கைப்பற்றும் நோக்கத்தில் பொய்யான காரணங்களை குறிப்பிட்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். எது எவ்வாறாக இருப்பினும் மனுதாரர்கள் ஏற்கனவே தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினை Scrap செய்யாமல் Re – visit கோரி மனுத்தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை. இதற்கு மாறாக மனுதாரர்கள் அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் 1, 2 எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், மாண்புமிகு உயர்நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலுக்கும் எதிராக உள்ளதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி ஆக வேண்டியது என எதிருரை தாக்கல்.

4. 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விசயம் யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. அசல் வழக்கானது புல எண்.829/10 என்ற பொதுப்பாதை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை, செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் இ.ம.எண்.7/2021 மனுவில் நியமிக்கப்பட்டு, அவர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தை கடந்த 24.06.2022 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார். இந்த அறிக்கை மற்றும் வரைபடத்தை பொறுத்தும் உபயமனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த நிலையில் புல எண்.829/12 ஐ நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய தவறி விட்டதாகவும், அதனை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டியது அவசியம் என இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனு அபிடவிட்டில் தாவா சொத்திற்கு அருகில் உள்ள புல எண்கள்.829/10, 829/11, 829/12 மற்றும் 829/58 ஆகியவைகள் பிரச்சனைக்குரிய பகுதிகள் என்றும், தற்போது புல எண்.829/12 ஐ அளவீடு செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இ.ம.எண்.7/2021–ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் ' சர்வே எண்.829/10 பாதையானது சர்வே எண்.829/11, 829/58 ஐ சுற்றிலும் பாதையாக அமைந்துள்ளது. ஆனால் மேற்கு பக்கத்தில் குறுவட்ட அளவரின் வரைபடத்தில் கண்டவாறு தொடர்ச்சியின்றி முடிந்து விடுகிறது. மேற்படி வரைபடத்தில் மேற்கு பக்கத்தில் சர்வே எண்.829/12 வருவாய்த்துறை அடங்களில் வீதி என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த இடம் தெற்கு, மேற்கு, வடக்கில் சுவர் வைத்து அடைக்கப்பட்டு திறந்தவெளி கோயில் போன்று நிலத்திலிருந்து சுமார் 3 அடி உயரத்தில் சிமெண்ட் தளத்துடன் கூடிய அமைப்பாக உள்ளது. மேற்படி சர்வே எண்.829/12 ன் கிழக்கல் இருந்து குறுவட்ட அளவரின் வரைபடத்தில் ஆரஞ்சு வண்ணத்தில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்.829/10 பாதையிடமானது சுமார் 6 அடி உயரத்திலும், தென்வடலாக சுமார் 10.5 அடி நீளத்தில் சுவர் வைத்து அடைக்கப்பட்டு நடுவில்

சுமார் 3 அடி அகல இரும்பு கதவு பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்.829/12 க்கு அருகில் தெற்குபுறத்தில் உள்ள சர்வே எண்.829/10 பாதையிடத்தில் சர்புதீன் என்பவரின் கூரைச்சாளை அமைந்துள்ளது. ' என்று குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. ஆக மேற்படி அறிக்கையிலிருந்து புல எண்.829/12 ம் அளவீடு செய்யப்பட்டுள்ளது, அதன் அடிப்படையில் மேற்படி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் மேற்படி புல எண்.829/2 ஐ அளக்கவில்ல என்றும், வருவாய் சர்வே கற்களை கண்டறியவில்லை என்றும் புல எண்.829/12 அளவீடு செய்யாததால் புல எண்.829/11, 829/58 ன் அளவுகள் சரியாக இல்லை என்றும், மற்றும் புல எண்.829/58 நிலமானது மனுதாரர்களின் வீட்டு வாசல் முன்பு வரை வராது என்றும், எனவே புல எண்.829/12-ஐ அளவீடு செய்ய வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பு வாதம் முன் வைக்கப்பட்டது.

10. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கிற்கு எவ்வித சம்மந்தமும் இல்லாத கோவில் இடமான புல எண்.829/12 ஐ மீண்டும் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளவீடு செய்ய தேவை இல்லை என்றும் எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது. மனுதாரர் கோரியுள்ள புல எண்.829/12 வழக்கிற்கு சம்மந்தப்பட்டதல்ல என்ற போதிலும் நீதிமன்ற ஆணையர் அதனையும் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். அது பொறுத்து மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. இந்த நிலையில் வழக்கிற்கு சம்மந்தப்படாத புல எண்.829/12 சொத்தை அளவீடு செய்ய வேண்டும் என்ற மனுதாரர் கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

**இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.03.17 17:00:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**மனுதார்கள்/வாதிகள் தரப்பு சாட்சி:–** இல்லை.

**மனுதார்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**இல்லை.

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:–** இல்லை.

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**இல்லை.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.03.17 17:00:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.